30th June 1962]

(*b*) if so, the steps taken to check the spread of this disease?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR: (*a*) Yes, Sir.

(*b*) With a view to checking the spread of a disease known as 'spike', research work is being undertaken by the Forest Research Institute at Dehra Dun and at the Research Station at Bangalore. Madras State is also taking up research work at the Denkanikota Research Centre under the supervision of the State Silviculturist.

திரு. வை. சங்கரன்: இதுவரை சுமாராக உற்பத்தி எவ்வளவு தூரம் பாதிக்கப்பட்டிருக்கிறது? அதனல் நஷ்டம் எவ்வளவு இருக்கும் என்று மதிப்பிடப்படுகிறது?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்ருடியார்: அநேகமாக நமக்குள்ள சந்தன மரங்கள் அதிக ஏக்காாவில் இல்லை. தானுக வளர்ந்து வருகின்ற மரம். சட்டென்று நோயினல் பாதிக்கப்பட்டு வருகிறது.

திரு. வை. சங்கரன்: 'சாண்டலுட் ஆயில்' நமக்கு அந்நியச் செலாவணி தேடித்தரும் பொருளாதலால் அதைப் பரிசீலனை செய்து நோயினின்றும் காப்பதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுமா?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்ருடியார்: 1913-இல் இருந்து இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இன்னும் அதற்குரிய நல்ல மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: சந்தன மரங்களுக்கு வருகின்ற நோய் பல ஆண்டு காலமாக நம்முடைய காட்டு வளத்தை அழிப்பதாகக் கேள்விப்பட்டேன். இங்கிருந்து சில அதிகாரிகளை மைசூருக்கு அனுப்பி, அவர்கள் பின்பற்றி வருகின்ற முறைகளை யாவது அறிந்து வர இந்தச் சர்க்கார் ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்ருடியார்: இதைத்தான் முன்பே சொன்னேன்.

திரு. எம். வி. கரிவேங்கடம்: வடாற்காடு ஜில்லாவில் சர்க்கார் பல சந்தன மரத் தோப்புகளை வளர்த்து வருவதாகத் தெரிகிறது. அங்கும் இந்த நோயினல் பாதிக்கப்பட்டு இருக்கிறதா?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்ருடியார்: பரவலாக எல்லாவிடத்திலும் இந்தச் சீக்கு இருக்கிறது.

வாணியம்பாடி (தாலுக்காவாக மாற்றுதல்)

* 63 **கேள்வி.—திரு. மு. பொ. வடிவேல்:** கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

வடாற்காடு ஜில்லா வாணியம்பாடி பகுதியை சப்-தாலுக்காவாகச் செய்வதற்காக அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

[30th June 1962

THE HON. SRI V. RAMAIAH: The proposal is under the consideration of the Government along with the other proposals for introducing revised administrative set up in the District consequent on estate areas in the District being settled and converted into ryotwari areas.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, என் தொகுதியானது—ஊத்தங்கரைத் தொகுதியானது—முன்பு சப் தாலுக்காவாக இருந்தது. அதை மாற்றி தாலுக்காவாகச் செய்யப் போவதாக முன்பே பிரகடனம் செய்யப்பட்டிருந்தது. இதுவரை அவ்வாறு செய்யப்படவில்லை. அப்படி நடவடிக்கை எடுத்துக் கொள்ளாத காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER: It is a different question altogether.

நாட்டாண்மைக் கழக மருத்துவ மனைகள்.

** 64 கேள்வி.—திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் :* கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மாவட்ட நாட்டாண்மைக் கழகங்கள் எடுபட்ட பின்பு அவைகளின் பராமரிப்பில் இருந்துவந்த கிராம மருத்துவ மனைகள் அல்லாத மருத்துவ மனைகளின் பராமரிப்பு அமைப்பைப் பற்றி அரசினர் என்ன முடிவு எடுத்துள்ளனர் ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: Under the Madras Panchayats Act, 1958, former District Board hospitals have come to vest in the Government while former District Board dispensaries have come to vest in the Panchayat Union Councils concerned.

திரு. ம. கமலநாதன் : சர்க்காரிலே எடுத்துக்கொள்ளப்பட்ட ஆஸ்பத்திரியிலே டாக்டர்கள் இல்லாத குறையை உடனே நிவர்த்திக்க முடியுமா என்று அறிய விரும்புகின்றேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : முன்பே நான் இதற்குப் பதில் சொல்லியிருக்கிறேன்.

திரு. ம. கமலநாதன் : ஜில்லா போர்டு ஆஸ்பத்திரிகளை பஞ்சாயத்து யூனியனுக்கு மாற்றிய பிறகு அந்த உத்யோகங்களுக்குக் கவர்ச்சிகரமான சம்பளம் கொடுத்தாலொழிய நல்ல டாக்டர்கள் அதற்குக் கிடைப்பது அரிது. இதை அனுபவத்தில் பார்த்து வருகிறோம். ஆகவே டாக்டர்களுக்கு அதிகச் சம்பளம் கொடுக்க பஞ்சாயத்து யூனியன்கள் முன்வந்தால் அனுமதி அளிக்கப்படுமா ? அப்படிக் கொடுக்க அரசாங்கம் ஒரு ஏற்பாடு செய்து கொடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : தற்போது பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலுடைய நிலைமையை ஆராய்ந்து அதற்கேற்றபடி முயற்சி செய்துகொண்டிருக்கிறோம்.